**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 27–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **கமல் பாட்ஷா** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**27.11.2025 OS.42/2023 வா.சா.1 கமல் பாட்ஷா**

**வாதி தரப்பு முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபணம் வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) கடந்த 05.08.1966 ம் தேதியிட்ட முகைதீன் பிச்சை ராவுத்தாருக்கு இப்ராஹிம் ராவுத்தர் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்ததற்கான கிரையப் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி கிரையப் பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) கடந்த 03.11.2021 ம் தேதியிட்ட ஜீனத்பீவி இறப்புச்சான்று இணையவழி நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஜீனத்பீவி இறப்புச்சான்று இணையவழி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3) கடந்த 24.11.2021 ம் தேதியிட்ட ஜீனத்பீவி வாரிசுச்சான்று இணையவழி நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) தாக்கல் செய்கிறேன். **மேற்படி** ஜீனத்பீவி வாரிசுச்சான்று இணையவழி நகல் பிரதிவாதி தரப்பில் மேற்படி ஜீனத்பீவியின் வாரிசான தௌலத் பீவியை சேர்க்கவில்லை என்று சொல்லி ஆட்சேபிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனையுடன் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4) எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) தாக்கல் செய்கிறேன். **மேற்படி எனது ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2025.11.27 15:21:47 +0530

5) கடந்த 31.07.2023 ம் தேதியிட்ட 3ம் வாதி பெயரில் கீழடி ஊராட்சியில் ஏற்பட்ட வீட்டுவரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

6) கடந்த 04.08.2023 ம் தேதியிட்ட 3ம் வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

7) கடந்த 05.08.2023 ம் தேதியிட்ட மேற்படி வழக்கிறஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை (எண்ணம் 3) அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி அஞ்சலக ஒப்புதல் அட்டை (எண்ணம் 3) அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

8) கடந்த 21.08.2023 ம் தேதியிட்ட பிரதிவாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி பிரதிவாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

9) 3ம் வாதி திருப்புவனம் வட்டாட்சியர் முன் எழுதி கொடுத்த வாக்குமூலம் நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி வாக்குமூலம் நகல் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

10) கடந்த 31.05.2022, 22.08.2022, 12.09.2022 மற்றும் 12.10.2022 ஆகிய தேதிகளில் மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் 3ம் வாதி மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவிற்கான ஒப்புகைச் சீட்டு எண்ணம் 4 இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஒப்புகைச் சீட்டு எண்ணம் 4 இணையவழி நகல் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பிராதுபடி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

**(வாதிகள் தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2025.11.27 15:21:58 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam